

இராயபுரம் முன்னாள் பகுதி கழகச் செயலாளர், கட்பீஸ் அ.பழனி ஆறாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், ஐ ட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ, ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ. உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சிவகாசி – நாரணாபுரத்தில் பட்டாசு ஆலை வெடி விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதிஉதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜுலை 22-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், நாரணாபுரம் கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு :-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், நாரணாபுரம் கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று (21.07.2025) பிற்பகல் சுமார் 3.50 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் கீழத்திருத்தங்கல், முத்துராம லிங்கம் காலனியைச் சேர்ந்த கார்த்திக் (வயது 23) த/பெ.தங்கராஜ் மற்றும் இரண்டு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் திருமதி.நாகலட்சுமி (வயது 55) க/பெ.முனியசாமி, திருமதி.மாரியம்மாள் (வயது 53) க/பெ.முத்துவேல் மற்றும் திருமதி.மாரியம்மாள் (வயது 50) க/பெ.தங்கராஜ் ஆகிய மூன்று நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் கொளத்தூர் – திரு.வி.க. நகர்

# தொகுதி பாக முகவர்கள் -சமூக வலைதள முகவர்கள் - இளைஞரணி ஒருங்கிணைப்பாளர்கள் பயிற்சிக் கூட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு – என்.ஆர்.இளங்கோ எம்.பி. சிறப்புரை!

*சென்னை, ஜுலை 22-*

*சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெரம்பூர், டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் 'நம் மண், மொழி, மானம் காத்திட' "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை மற்றும் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி மற்றும் திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி பாக நிலை முகவர்கள் (BLA-2), பாக சமூக வலைதள முகவர்கள் (BDA) மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர்கள் (BYO) பயிற்சிக் கூட்டம் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பொதுப்பணி துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர் திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிகளில் "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை பணியில் உள்ள 1,332 களப்பணியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கி, பணியில் சிறப்பாக செயல்பட்டவர்களை பாராட்டியும், தேர்தல் நேரங்களில் பாசிச சக்திகள் எப்படியெல்லாம் செயல்படும் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லி அப்படிப்பட்ட சூழலில் எப்படி செயல்பட வேண்டும் என்று எடுத்துக் கூறி சிறப்புரையாற்றினார்.*

*மேலும் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் உணவு பரிமாறி சிறப்பித்தார்.*

*இந்நிகழ்ச்சியின் தொடக்கத்தில் கழக வழக்கறிஞர் அணி செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் என்.ஆர்.இளங்கோ, "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை பாக நிலை முகவர்கள் (BLA-2), பாக சமூக வலைதள முகவர்கள் (BDA) மற்றும் இளைஞர் அணி ஒருங்கிணைப்பாளர்கள் (BYO) ஆகியோர் எவ்வாறு உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபடவேண்டும் என்றும் மற்றும் BLA 2 க்களுடைய முக்கியத்துவம் என்ன, அவர்கள் தேர்தல் காலங்களில் எவ்வாறு களப்பணியாற்றுவது குறித்து கணினி மூலமாக விளக்கி கூறினார்.*

*இச்சிறப்பு மிகுந்த நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் டான் பாஸ்கோ பள்ளி ரெக்டார், ஜோசப் லியோ தொகுதி பார்வையாளர்கள் இரா. விடுதலை, என். கிருஷ்ணமூர்த்தி கொளத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் ஐசிஎப் வ. முரளிதரன், கொளத்தூர் மேற்கு பகுதி செயலாளர்*

*எ.நாகராஜன், எம்.சி, திரு.வி.க நகர் வடக்கு பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன், திரு.வி.க. நகர் தெற்கு பகுதி செயலாளர் எம்.சாமி கண்ணு, மண்டலக் குழு தலைவர்கள் பி.கே. மூர்த்தி, சரிதா மகேஷ் குமார் மற்றும் இரா.நரேந்திரன், கே.சந்துரு, சி. மகேஷ்குமார், கே.எஸ். எம்.நாதன், பரிதிஇளம்சுருதி,*

*மாவட்ட நிர்வாகிகள்: ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன், பகுதிக் கழக செயலாளர்கள்: கூ.பி. ஜெயின், வே.வாசு, டி. எஸ்.பி.ராஜகோபால், எம். டி.ஆர். நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர். பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி. செம்மொழி, பி.ஜே.துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி.பூர்ணிமா, அ.நிர்மலா தேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி,*

*மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில்விஜய், க.வினோத், எல்.பி.எஃப். மோகன், ஜி. தாமோதரன், எம்.பிரோஸ் கான், பி.விஜயகுமார், இரா.வீரமணி, மா.அசோக் குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி. பி.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், து.ஆயிரம், சுதாதீன தயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி, மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.*



தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை திருவள்ளூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் ஆண்டார் குப்பம் ஊராட்சி, பாகம் எண் 266ல் சோழவரம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் நா.செல்வசேகரன் கலந்து கொண்டு வீடு வீடாகச் சென்று மக்களுடன் உரையாடி உறுப்பினர் சேர்க்கும் பணியில் ஈடுபட்டார். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் "ஓரணியில் தமிழ்நாடு மக்கள் இயக்கத்தினை விளக்கி துண்டறிக்கை விழிப்புணர்வு பிரச்சாரம் குரோம்பேட்டை தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வாயிலில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் எல்.பிரபு தலைமையில் நடைபெற்றது. மாநில மாணவரணி துணை செயலாளர் ஜெ.ராமகிருஷ்ணன்,ஜோசப் அண்ணாதுரை, கலாநிதி,ஜெகதீப்,ஜெகன்,கோ.ஜானகிராமன் உள்ளிட்ட ஒன்றிய,பகுதி,நகர அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் துண்டறிக்கையை வழங்கினர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப்மற்றும் அனைத்து துறை சார்ந்த அதிகாரியிடம் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் சந்தித்து கோரிக்கைமனுக்களை வழங்கி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் அருகில் ஒன்றிய கழக செயலாளர்கள் சி.என்.சண்முகம், பி.டி.சந்திரன், பா.சம்பத், ஏ.எல்.விஜயகுமார், மோ.ரமேஷ், மற்றும் செங்குட்டவன் திருவேங்கடம், வி.ஜி மோகன், சரவணன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### சீர்காழி அகர எலத்தூர் கிராமத்தில் ஆற்றில் மூழ்கி

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜுலை 22-

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், அகரஎலத்தூர் கிராமம், பனங்காட்டங்குடி பகுதியிலுள்ள கொள்ளிடம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

மயிலாடுதுறை மாவட்டம் மற்றும் வட்டம், பட்டமங்கல ஆராய தெருவைச் சேர்ந்த அருண்சங்கர் (வயது 22) த/பெ.சங்கர் மற்றும் சீர்காழி வட்டம், கொண்டல் கிராமம், குடியான தெருவைச் சேர்ந்த சிபிராஜ் (வயது 21) த/பெ. ராஜேஷ் கண்ணா ஆகிய இருவரும் நேற்று (20.7.2025) மாலை சுமார் 4.00 மணியளவில் சீர்காழி வட்டம், அகரஎலத்தூர் கிராமம், பனங்காட்டங்குடி பகுதியில் உள்ள கொள்ளிடம் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இச்சம்பவத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### கொளத்தூர், கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும்

# 762 மாணவ, மாணவியருக்கு கல்விக் கட்டணம் - உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகள்!

## அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்!

*சென்னை, ஜுலை 22-*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீர்மிகு வழிகாட்டுதலின்படி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (21.07.2025) சென்னை, கொளத்தூர், கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு தொடக்க விழாவில் அக்கல்லூரியில் பயிலும் 762 மாணவ, மாணவியருக்கு கல்விக் கட்டணம் ரூ.10,000/- மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளையும், அக்கல்லூரிக்கு புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள 11 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளருக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.*

*இந்து சமய அறநிலையத்துறை நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல் சமூக நோக்கோடு செயல்படும் அறநிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. அந்த வகையில் திருக்கோயில்களின் சார்பில் 25 பள்ளிகளும், 10 கல்லூரிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 22,249 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் சார்பில் கொளத்தூர், திருச்செங்கோடு, விளாத்திக்குளம், ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் 4 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டன.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 02.11.2021 அன்று சென்னை, கொளத்தூர் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தொடங்கி வைத்து, அக்கல்லூரியில் பயிலும் 240 மாணவ, மாணவிகளுக்கு கல்விக் கட்டணம் ரூ.10,000/- மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளை வழங்கினார்.*

*இக்கல்லூரியில் B.Com., BBA, BCA, B.Sc. Computer Science, சைவ சித்தாந்தம் ஆகிய பட்டப்படிப்புகளும், ஓராண்டு சைவ சித்தாந்தம் பட்டயப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகிறது.*

*அதனைத் தொடர்ந்து, 2022-ஆம் ஆண்டில் 480 மாணவ, மாணவியருக்கும், 2023-ஆம் ஆண்டில் 685 மாணவ, மாணவியருக்கும், 2024-ஆம் ஆண்டில் 748 மாணவ, மாணவியருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்விக் கட்டணம் ரூ.10,000/- மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளை வழங்கினார்.*

*மேலும், 23.12.2024 அன்று இக்கல்லூரிக்கு 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.*

*அதனை தொடர்ந்து, இன்று நடைபெற்ற அருள்மிகு கபாலீசுவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஐந்தாவது ஆண்டு தொடக்க விழாவில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கலந்து கொண்டு, அக்கல்லூரியில் பயிலும் 762 மாணவ, மாணவியருக்கு கல்விக் கட்டணம் ரூ.10,000/- மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளையும், அக்கல்லூரிக்கு புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள 11 உதவிப் பேராசிரியர்கள் மற்றும் ஒரு கண்காணிப்பாளருக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கி, விழாப் பேருரையாற்றினார்.*

*கொளத்தூர் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயின்ற 347 மாணவ, மாணவியர் வளாக நேர்காணல் (Campus Interview) மூலம் பல்வேறு முன்னணி நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, உயர் மட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகிசிவம், கலை மற்றும் பண்பாட்டுத் துறை இயக்குநர் செல்வி கவிதா ராமு, தமிழ்நாடு சேமிப்பு கிடங்குகள் நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், கபாலீசுவர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் பி.விஜயகுமார் ரெட்டி, கல்விக்குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



எழும்பூர் 99வது வார்டுக்கு உட்பட்ட புதிய பூபதி நகரின் 1 முதல் 4 தெருக்களில் எதிர்பாராதவிதமாக திடீர் தீவிபத்து ஏற்பட்டது, இதனை திமுக அயலக அணி மாநில துணைச் செயலாளர் மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி நேரில் சென்று பார்வையிட்டார். உடன் தீயணைப்பு துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், கோட்ட பொறியாளர் கே.சிவகுமார், ஆதிதிராவிடர் நலக்குழு பகுதி துணை அமைப்பாளர் எஸ்.எம்.ரவிக்குமார், கழக செயல்வீரர்கள் கே.காமேஷ், எஸ்.சந்துரு, கே.சதீஷ், எம்.செல்வம், கே.சத்யா பார்த்திபன், கே .சச்சின் திவாகர், சஞ்சய் தினேஷ், உடன் இருந்தனர்.